# 2018 தை மாதம் இறைவேண்டலுக்கான கைக்கொடுத்தல்

***"உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா?"*** (1 கொரிந்தியர் 6:19)

ஒரு வருடம் கடந்து புது வருடம் பிறந்துள்ளது. இறை வேண்டலின் ஊழியர்களாக கடந்த வருடம் முழுவதும் நீங்களும் நானும் எங்களது புபுதுவ மக்கள், எங்கள் பரிசுத்த திருச்சபை, எங்கள் நாடு, முழு உலகம் மற்றும் உத்தரிக்கிற ஸ்தலத்திதுள்ள ஆத்துமாக்களுக்காகவும், அதைப் போல் பலவித பிரச்சினைகளுக்காக, நோய் நொடி துன்ப துயரங்களுக்கு முகங்கொடுத்த அனைவருக்காகவும் செபித்தோம். நடுநிலை வகித்தோம். அவற்றிற்கு உகந்த பதிலை ஆண்டவர் தந்தமைக்காக நாம் அவருக்கு பலமுறை நன்றிப் புகழ் பாடுவோம்.

இவ் வருடத்திலும் அந்த தூதுச் சேவைக்கு கடந்த வருடத்தைப்பார்க்கிலும் ஆர்வத்துடன் உள்ளாகுவோம்.

இறைவேண்டலின் ஊழியர்கள் என்றவகையில இம் மாதத்தில் தியானிப்பதற்கு, வாழ்வதற்கு, மற்றவர்களுக்காக மனறாடுவதற்கு மிகவும் அவசியமான, சவாலான வார்த்தையொன்றை பரிசுத்த வேதாகமத்தில் புனித சின்னப்பர் முன்வைக்கின்றார். **"எமது உடல் தூய ஆவியானவரின் கோவில்"** என்பதாகும்.

அப்படியாயின் இம் மாதம் முழுவதும் இவ் வார்த்தை மிகவும் முக்கியமான வார்த்தையாக கவனத்தில் கொண்டு தெளிவு படுத்திக் கொள்வதற்கும் மேலாக நடைமுறையில் **இறைவன் எமக்குக் கொடுத்துள்ள இந்த உடலை தூய்மையாக பாதுக்காத்துக் கொள்வதற்கும், அவதூறுகளுக்கு இடமளிக்காமல் எமக்குள் வாழும் தூய ஆவியானவரின் ஒளி மற்றவர்களுக்கும் பிரகாசித்திட, அதாவது எமது நடவடிக்கைகளில், சொற்களில், செயற்பாடுகளில் மற்றவர்களுக்கு வெளிப்பட செயல்படுவோம். அவ்வண்ணமே முழு புபுது மக்களினதும் இந்த ஒளி ஒளிர்ந்திட செய்திடுமாறு முழு மனதுடன் செபிப்போம். வேண்டுவோம்.**

**"உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றோரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கெட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ள இயலாது ஏனெனில் அது அவரைக் காண்பதுமில்லை அறிவதுமில்லை. நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில் அவர் உங்களோடு தங்கியிருக்கிறார். உங்களுக்குள்ளும் இருக்கிறார்."**

(புனித யோவான் 14:16-17)

**முதலாம் வாரம் :- தியானவாசிப்பு 1 கொரிந்தியர் 6:12-19**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :

எமது உடலுக்குள் தூய ஆவியானவர் வாசம் செய்கிறார் என்றும், எமது உடலைப் போன்று முழு புபுது மக்களினதும், கிறிஸ்தவ மக்களினதும் உடலை தூய்மையாக பாதுகாத்திட தேவையான வல்லமையை "அப்பா" தந்தையிடமிருந்து பெற்றிட நாம் முறையிட்டு செபிப்பொம். (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள் :

- இவ்வருடத்தில் எமது புபுதுவ, திருச்சபை, தேசம், உலகம் அனைத்திலும் இறைவனின் பரிசுத்தமான விருப்பம் நிறைவெறிட வேண்டுவோம்.
- சுவாமி அப்பாவுக்காக.
- இறைவாக்கினர் குழு, துணையாளர் குழு, ஆலோசனைக் குழு, உட்பட புபுதுவையில் பொறுப்புவகிக்கும் அனைவருக்காகவும்.
- தாய், தந்தையர், இளைஞர், யுவதி, மாணவ, மாணவி, சிறுவர் பகுதிகளுக்காக.
- சுபெந்தி சுரெந்தி, சபெந்தி, சுமெதி சங்கங்களுக்காக
- தை மாதம் 06ம் திகதி சனிக்கிழமை பிரசங்காராமையில் நடைபெறும் செபப் பாடசாலையில் பங்குபற்றும் மக்கள் மற்றும் வார்த்தையின் ஊழியர்களுக்காக
- ஏனைய வேண்டுதல்கள்……

**இரண்டாம் வாரம் : தியானவாசிப்பு உரோமையர் 8:9-11**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :

தை மாதம் 14ம் திகதி திருமுழுக்கு திருவிழாவினை முன்கொண்டு பல்வேறு சங்கங்களிலும் நடைபெறும் வேண்டுதல் வழிபாடுகளில் தூய ஆவியானவரின் பொழிதலை நிறைவாக அனுபவத்திட தேவையான வல்லமை கிடைக்குமாறு. (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள் :

- தை மாதம் 12, 13, 14 திகதிகளில் தலவில புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெறும் சிலாப வட்டாரத்திற்கு சொந்தமான புபுது மக்களின் திருமுழுக்கு திருவிழாவினை முன்கொண்டு செய்யும் செபப் பாசறையின் மூலம் சிலாப மறைமாவட்டத்தில் தூய ஆவியானவரின் ஒளி ஒளிர்ந்திட வேண்டி
- புற்றுநோய் இவ்வுலகில் நிரந்தரமாக அற்றுப் போய்விடுமாறு
- புற்றுநோய், டெங்கு, சிறுநீரக நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள அனைத்து நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு உதவும் வைத்தியர்கள் பணிவிடை புரியும் ஊழியர்கள் அனைவருக்காகவும் மற்றும் அவர்களை பராமரிக்கும் அனைவருக்காகவும்.
- குடும்ப வாழ்வில் பலவித பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துக் கொண்டிருப்போர் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்காகவும்.
- மது, போதைப் பொருட்கள் மற்றும் பலவிதமான அடிமைத்தனங்களுக்கு அகப்பட்டு இருக்கும் சிறுவர், இளைஞர், யுவதிகள் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்காகவும்.
- ஏனைய வேண்டுதல்கள்……

**மூன்றாம் வாரம் : தியான வாசிப்பு உரோமையர் 8:12-17**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :

புபுதுவையில் முன்னெடுத்துள்ள யோசேப்வாஸ் வழிநடத்தல் எனும் அனகாரிக தூதுச் சேவையில் ஈடுப்பட்டுள்ளவர்கள் வழியாக இலங்கையில் எல்லா கிராமங்களிலும் புகழ்ச்சி குழுக்கள் ஆரம்பமாகிட வழி அமைந்திட வேண்டி (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:

- தை மாதம் 20-21 திகதிகளில் பிரசங்காராமையில் நடைபெறும் மும்மாத பாசறையில் பங்குபெறும் அனைத்து பொறுப்பாளர்களுக்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்.
- வெளிநாடுகளிலுள்ள புுது சங்கங்களுக்காகவும் அங்கு இறை வேண்டலில் தொடர்ப்பு கொண்டிருக்கும் அனைவருக்காகவும். பொறுப்பாளர்களுக்காகவும்.
- புயல் வரட்சி மற்றும் பலவித இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் அவர்களைப் பராமரிகப்பவர்களுக்காகவும், அவ்வாறான நிகழ்வுகளினூடாக வரும் இறைவனின் குரலுக்கு செவிமடுக்க உலக மக்களுக்குத் தேவையான தூய ஆவியானவரின் ஞானம் கிடைக்குமாறு
- ஏனைய வேண்டுதல்கள் …….

**நான்காம் வாரம் : தியான வாசிப்பு உரோமையர் 8:26-36**

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :

எமது நாட்டிற்காக (20 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள் :

- தை மாதம் 27ம் திகதி பிரசங்காராமையில் நடைபெறும் திருமனத்தை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொள்ளும் அனைத்து ஜோடிகள் மற்றும் வார்த்தைனின் ஊழியர்களுக்காகவும்
- கர்ப்பவதிகள் மற்றும் குழந்தை பேற்றை எதிர்பார்த்திருக்கும் தம்பதிகளுக்காகவும்.
- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் கருக்கலைப்பு மற்றும் துஷ்பிரயோகத்தினின்று இளம் பெண்கள் பிள்ளைகள் காப்பாற்றுமாறு வேண்டி
- ஏனைய வேண்டுதல்கள்…….

தூய ஆவியானவரின் வல்லமையால் நிரம்பிய ஒளிமிக்க வருடமாக அமையட்டும்!

இறைவேண்டுதல் மற்றும் நடுநிலை சேவை